DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 128-2025**

**Deposition of Witness for Prosecution : P.W. 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மைக்கல்ராஜ் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 22.01.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்சமயம் வேளாங்கண்ணி மெயின்ரோட்டில் வசித்து வருகிறேன். என் வீட்டிற்கு அடுத்து ரவிந்திரன் அவர்களது வீடு, அதற்கு அடுத்து ஜான்சன் பார்க் என்ற லாட்ஜ் உள்ளது. கடந்த 11.08.2020ந் தேதி சுமார் மாலை 5.45 மணியளவில் ஜான்சன் பார்க்கில் சத்தம் கேட்டது. நான் எனது வீட்டிற்கு பக்கத்தில் உள்ள ரவிந்திரன் அவரது மருமகள், மகன் ஆகியோர் அங்கு சென்றோம். அந்த லாட்ஜில் வேலை செய்கின்ற முகேஷ் என்ற பையன் உன்னால் தான் எனது லாட்ஜில் பிரச்சனைகள் ஏற்படுகிறது என்று கூறி ஒரு மடுக்குகின்ற நைஃப் வைத்து ரவிந்திரனுடைய பையனை விலாவில் கீழ் பகுதியில் குத்தியபோது தடுத்தார். இவர் தடுத்து ஓடும்போது இன்னொரு லேபர் பக்கத்தில் இருந்தவரை அவரையும் குத்தினார். அவர் நொஞ்சம் நோஞ்சான் அவரது கையால் தடுத்தார் அந்த தடுத்த பிறகு அந்த கத்தியாலையே அவருடைய அக்குளில் குத்தினார். அவர் he was made in பிலிடிங் பிரோபஸ்லிங் ஓடி கிழக்கு பக்கம் எனது வீட்டு பக்கம் விழுந்துவிட்டார். முகேஷ் என்பவரை அடையாளம் காட்டமுடியுமா என்றால் என்னிடம் காட்டப்படுபவர் தான்

அவர் தற்சமயம் வெளுத்து போயிருக்கிறார். நான் 2மீட்டர் துாரத்தில் இருந்ததால் என்னிடம் காட்டப்படும் ஆயுதம் தான் அது என்று என்னால் கூறமுடியாது. அவர் பையர் ஸ்டேசன் அருகில் சென்று விழுந்துவிட்டார். அவருடைய மைரி நர்சாக இருக்கிறார் அவர்கள் அவரை மருத்துவமனைக்கு சென்று அனுமதித்தார். என்னை காவல் துறையினர் விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது வீட்டிற்கும் ஜான்சன் பார்க் ே ஹாட்டலுக்கும் சுமார் 500மீ துாரம் இருக்கும் என்று சொன்னால் சரியல்ல 25மீ தான் இருக்கும். எனது வீட்டிற்கும் பிராங்கலின் வீட்டிற்கும் சுமார் 200 மீ துாரம் இருக்கும் என்று சொன்னாலும் அவரது வீடு வடக்கு பக்கம் இருக்கும் என்று சொன்னாலும் சரியல்ல. ஜான்சன் பார்க் ே ஹாட்டல் உரிமையாளர் யார் என்றும், மேலாளர் யார் என்றும், அங்கு எத்தனை பேர்கள் வேலை பார்க்கிறார்கள் என்றும் அவர்கள் பெயர் எனக்கு தெரியாது என்றால் தங்கவேல் என்ற ஓனரை மட்டும் தெரியும் மற்றவர்களை எனக்கு தெரியாது. நடந்ததாக சொல்லப்படும் சம்பவ்திற்கு முன்பாக ஆஜர் எதிரியின் பெயர் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். ஆஜர் எதிரி கேராளவை சேர்ந்தவர் என்றும் அவருக்கு தமிழ் பேச தெரியாது என்றும் சொன்னால் அவருக்கு கொஞ்சம் தமிழ் பேச தெரியும். எதிரியின் பெயர் போலிசார் என்னை விசாரிக்கும்போது அவர் சொல்லிய பிறகு தான் எனக்கு தெரிய வந்தது என்று சொன்னால் சரிதான். காயம்பட்டதாக சொல்லப்படும் பிராங்கலின் என்பவருக்கு ஏற்பட்ட காயம் வயிற்றின் எந்த பகுதியில் ஏற்பட்டது என்று என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் காயம்பட்டதாக சொல்லப்படும் மற்றொரு நபரின் பெயரும் போலிசார் விசாரணையின்போது தான் தெரிந்துக்கொண்டேன். எனது தெருவில் தீயணைப்பு நிலையம் உள்ளது என்று சொன்னால் சரிதான். ஜான்சன் பார்க் லாட்ஜின் வாசலில் நின்று தான் நான் பார்த்தேன் உள்ளே செல்லவில்லை. நான் பார்க்கும்போது அதே பக்கவாட்டில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்கு பிராங்கலின் ஓடிவிட்டார். நான் சென்று பார்க்கும்போது லாட்ஜின்

உள்ளே என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும் போலிசார் சொல்லிக்கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.